அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044- 4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண் :170/2016
தேதி.:09/11/2016

**நேற்று இந்திய பிரதமர் பொது மக்களுக்கு ஆற்றிய உரையில் இனி 500 மற்றும் 1000 ரூபாய் நோட்டுக்கள் செல்லாது என்று அறிவித்தது துணிச்சலானது மட்டுமல்ல வரவேற்கத்தக்கது. அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி நிறுவனர் - தலைவர் திரு ஆர் சரத்குமார் அறிக்கை**

கணக்கில் வராத கருப்பு பணத்தை தானே முன் வந்து அறிவிப்பதற்கு செப்டம்பர் 30 வரை கெடு கொடுத்த மோடி அரசு, அடுத்த கட்டமாக கருப்பு மற்றும் கள்ள பணம் புழங்குவதற்கு உதவி செய்யும் 500 / 1000 ரூபாய் நோட்டுகளின் புழக்கத்தை நிறுத்தியது சமுதாயத்தில் சமத்துவத்திற்கு வழிகோல ஏதுவாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

அதே சமயத்தில் "இந்த ரூபாய் நோட்டுகள் இன்னும் ஒரு மாதத்திலோ அல்லது 15 நாட்களிலோ செல்லாது எனவே கருப்பு பணம் வைத்திருக்கும் அனைவரும் தானாகவே வருமானத்தை அறிவிக்க வேண்டும்" என சொல்லியிருந்தால் செப் 30 ஆம் தேதி கிட்டத்தட்ட 65000 கோடி அறிவிக்கப்பட்ட வருமானத்தில் 30000 கோடி வரியாக பெற்ற மத்திய அரசு இன்னும் கூடுதலாக பெற்றிருக்கமுடியும் என்று தோன்றுகிறது.

சமுதாயத்தின் அடி தட்டு மக்களும், சிறு வியாபாரிகள் மற்றும் தின வருமானம் ஈட்டும் மக்களும், வருமான வரியை சரியாக கட்டி இந்திய நாட்டின் உண்மையான குடிமகனாக இருக்கும் மேல்குடி மக்களும் பாதிக்கப்படுவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. இந்த பிரிவு மக்கள் சந்திக்க இருக்கும் சிரமங்களை தவிர்க்கும் வகையில் ஏற்பாடு செய்தபின்னர் அறிவிப்பை வெளியிட்டு இருக்கலாம்.

இந்த அதிரடி நடவடிக்கை சில நாட்களுக்கு மக்களிடையே பரபரப்பையும் பதட்டத்தையும் ஏற்படுத்தும் என்றாலும் இந்திய எதிர்காலத்தின் பாதுகாப்பு, சமுதாயத்தின் கொடிய நோய்களான லஞ்சம் மற்றும் பதுக்கல் போன்றவைகளை ஒழிப்பதற்கு உதவும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

பிரதமர் கூறியிருப்பது போல தீவிரவாத அமைப்புகளின் பண பரிவர்த்தனை இந்த நடவடிக்கையால் தடை செய்யப்பட்டால், மத்திய அரசிற்கு இந்த முயற்சி வெற்றியாக அமையும்.

இந்த அறிவிப்பின் உண்மையான குறிக்கோள்களை அடைகிறோமா என்பதை இன்னும் 6 மாத காலத்தில்தான் நாம் அனைவரும் உணர முடியும் என்றாலும் இந்த துணிச்சலான அறிவிப்பிற்கு பிரதமருக்கும் அவரது அமைச்சரவை சகாக்களுக்கும் எனது இயக்கத்தின் சார்பிலும் என் சார்பிலும் பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்து கொள்கிறேன்

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும்அன்புடன்,



**ஆர்.சரத்குமார்** B.Sc.
நிறுவனத் தலைவர்